# போதனை மற்றும் பிரசங்கம் ஆகியவற்றில் உதவிகள்

டேவிட் ரோப்பர்

## *தாவீதின் வாழ்வு*

*1. 1 சாமு. 16 ....................................................தாவீதின் தொடக்க கால வாழ்வு*
*2. 1 சாமு. 17 ................................................................ தாவீதும் கோலியாத்தும்*
*3. 1 சாமு. 17-23; 2 சாமு. 1 .......................................... தாவீதும் யோனத்தானும்*
*4. 1 சாமு. 18-23 ........................................................ தேடப்பட்டவராகத் தாவீது*
*5. 1 சாமு. 24-26; 2 சாமு. 1 .................................... தாவீது சவுலை விட்டுவிடுதல்*
*6. 1 சாமு. 27- 2 சாமு. 2 ............. பெலிஸ்தியாவில் தாவீதின் பதினாறு மாதங்கள்*
*7. 2 சாமு. 2-6:23; 1 நாளா. 11-14.... தாவீது அரசராயிருந்த தொடக்க ஆண்டுகள்*
*8. 2 சாமு. 6; 7;*
*1 நாளா. 13; 15-17; 22; 28 .........................தாவீதும் தேவனுடைய பெட்டியும்*
*9. 2 சாமு. 8-12; 21; 23;*
*1 நாளா. 11; 18-20; 23-27 .................. அரசர் என்ற வகையில் தாவீதின் வெற்றி*
*10. 2 சாமு. 11; 12 ............................................................... தாவீதும் பத்சேபாளும்*
*11. 2 சாமு. 11-16; 18 .... தாவீது பத்சேபாளிடத்தில் பாவத்திற்கு உட்பட்ட பின்பு*
*12. 2 சாமு. 15-20 ........................... தாவீதும் கர்த்தருடைய சிட்சித்தலும்/ஒழுங்கு நடவடிக்கையும்*
*13. 2 சாமு. 21-24; 1 இரா. 1; 2;*
*1 நாளா. 20-29 .........................................................தாவீதின் கடைசி நாட்கள்*

# தாவீதின் குடும்ப மரம்



# தாவீதின் குடும்பம்

*தாவீதின் தாய்:* வேத வசனங்களில் தாவீதின் தாய் பற்றி ஒரு சில குறிப்புகளே உள்ளன, அவர்கள் பெயர் ஒரு இடத்திலும் தரப்பட வில்லை. தாவீதின் வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதற்கு அறுபத்து ஆறு அத்தியாயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்கையில், இது (தாவீதின் தாயின் பெயர் தரப்படாதது) ஆச்சரியத்திற்கு உரியதாக உள்ளது. இது அவளுடன் தொடர்புடைய களங்கம் ஏதாவது இருக்கும் என்ற யூகத்திற்கு வழிநடத்தியுள்ளது.

தாவீது தேடப்பட்டவராக இருக்கையில், தமது தந்தையையும் தாயையும் மோவாபிய அரசரிடம் ஒப்புவித்திருந்ததால் (1 சாமு. 22:3), ஈசாயி தமது தாத்தாவான போவாசு செய்தது போலவே, தாமும் மோவாபியப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்திருக்கலாம் என்று சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

சங்கீதம் 51ல் அவரது குழப்ப மூட்டும் வாக்கியத்தில் மற்றொரு யூகம் மையங் கொண்டுள்ளது: "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (வ. 5). இந்த வசனத்தைக் கால்வினியர்கள், வம்சவழியில் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையில்/பாவத்தில் பிறத்தல் என்ற தங்கள் உபதேசத்திற்குப் பயன்படுத்துகின்றார்கள், ஆனால் நாம் "பாவத்தில் பிறப்பதில்லை" - ஒவ்வொருவரும் தங்கள் பாவத்திற்கு மட்டுமே பொறுப்பாளியாகின்றனரே தவிர, ஆதாம் உட்படத் தங்கள் முன்னோர்கள் எவருடைய பாவங்களுக்கும் பொறுப்பாளியாவ தில்லை என்று வேத வசனங்கள் போதிக்கின்றன (பிர. 7:29; எசே. 18:4, 19, 20; சக. 12:1; மத். 18:3; 19:14; அப். 17:29; ரோமர் 2:6; 1 கொரி. 14:20; 2 கொரி. 5:10; கலா. 6:5; முதலியன). தாவீது தமது சொந்தப் பாவத்தினால் நிறைந்த தன்மையைக் குறிப்பிடவில்லை, மாறாக அவர் கர்ப்பந்தரிக்கப்பட்ட மற்றும் பிறந்த பாவச் சூழ்நிலையைக் குறிப்பிட்டார். இந்த வார்த்தைகள் பாவம் நிறைந்த உலகம் பற்றிய கவிதைத்துவமான குறிப்பாயிருக்கலாம் - ஆனால் "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்ற வார்த்தைகளில் இருள் மிகுந்த அர்த்தமொன்றும் இருக்கலாம். இந்த சங்கீதமானது விபசாரம் என்ற பாவத்தைப் பற்றியதாக உள்ளது; தாவீது ஒருவேளை தமது தாய் அந்தப் பாவத்தைச் செய்து குற்றம் சுமந்தாள் என்று கூறுகின் றாரோ? சிலர், தாவீது சட்ட விரோதமாகப் பிறந்த, விரும்பப்படாத ஒரு பிள்ளையாக, குடும்பத்தில் இருந்த மற்றவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகின்ற பிள்ளையாக இருந்தார் என்று நம்புகின்றார்கள்.

தாவீதின் தாய் பற்றிய சிக்கலை நாம் ஒருக்காலும் பிரிக்க இயலா மல் இருக்கலாம், ஆனால் அவர் தம் தாயிடம் மிகவும் பிரியமா யிருந்தார் மற்றும் அவளை அக்கறையுடன் பராமரித்தார் என்பதற் கான ஒவ்வொரு குறிப்பும் உள்ளது (1 சாமு. 22:3; 2 சாமு. 19:37).

*தாவீதின் சகோதரிகள்:* தாவீதின் இரு சகோதரிகளான செரூயாள் மற்றும் அபிகாயில் ஆகியோர் மற்றும் அவர்களின் வழித் தோன்றல் கள், 1 நாளா. 2:16, 17ல் பெயர் குறிப்பிடப்படுகின்றார்கள். செரூயாளின் மகன்களில் ஒருவருக்கு யோவாப் என்று பெயரிடப் பட்டது. அபிகாயில் (அல்லது அபிகாள்) என்பவள் 2 சாமு. 17:25ல் குறிப்பிடப்படுகையில், அவள் செரூயாளின் சகோதரி என்று அடையாளப்படுத்தப்பட்டாள் (இவளுக்கு யோவாப் என்ற பெயர் கொண்ட மகன் இருந்தான்). இவள் ஈசாயின் மகள் என்பதற்குப் பதிலாக, "நாகாசின் மகள்" என்ற கூறப்பட்டாள். இதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன: (1) "நாகாஸ்" என்பது ஈசாயின் இன்னொரு பெயராயிருந்தது. (2) "நாகாஸ்" என்பது ஈசாயினு டைய மனைவியர்களில் ஒருத்தியின் பெயராயிருந்தது. (3) ஈசாயி, இருமகள் களைக்

கொண்டிருந்த விதவை ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டார், அவள் அதற்கு முன்னதாக நாகாஸ் என்ற மனிதருக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருந்தாள். இந்தக் கருத்தின் மீது அதிக வலுவாக உபதேசிக்க மிகக் குறைவான தகவல்தான் தரப்பட்டுள்ளது.

*குடும்பத்தில் இருந்த மற்றவர்களுடன் தாவீதின் உறவு:* எல்லா யூகங்களையும் ஒன்றுகூட்டிக் காணும் பொழுது, அந்தக் குடும்பத்தில் இருந்த எல்லாருக்குமோ அல்லது சிலருக்கோ தாவீது ஒரு அரை சகோதரராக அல்லது ஒன்றுவிட்ட/ தத்தெடுக்கப்பட்ட சகோதரராக இருந்திருக்கச் சாத்தியம் உள்ளது. இது அவர் ஏன் ஒரு வெளியாள் போல இருந்தார் என்பதை விளக்க உதவலாம்.



இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*ஒன்றைக் குறிப்பிடவும்:* ❒ ஆண் ❒ பெண்

*பெயர்:* ______________________________

*முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)*

______________________________

______________________________

______________________________

______________________________

*புதிய முகவரி பழைய முகவரி (முகவரியில் மாற்றம் இருக்குமானால்) தெரியப்படுத்தவும்:*

______________________________

______________________________

______________________________

______________________________

Email *விலாசம்:* ______________________________

*எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்?* ______________________________

*அது எங்கிருக்கிறது?* ______________________________

*பிரசங்கிப்பவரின் பெயர்:* ______________________________

*நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்):*

❒ பிரசங்கிப்பவர் ❒ அங்கத்தினர்

❒ வேதபாட வகுப்பு ஆசிரியர் ❒ அங்கத்தினரல்லாதவர்

*இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடு களை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):*

❒ இல்லை.

❒ ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.

❒ ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர் ______________________________

*(அடுத்த பக்கம் பார்க்கவும்)*